தினமலர் வெள்ளி டிசம்பர் 7, 2018

தினமலர்

# பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

அரியலூர், டிச.7-

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் மாணவ, மாணவியர்களின் பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி அரியலூரில் நடந்தது.

கலெக்டர் விஜயலட்சுமி கொடியசைத்து துவக்கி வைத்து, துணிப்பைகள் வழங்கி னார்.

பாக்கு மட்டை தட்டுகள், இலைகள், இலைகளால் பிண்ணப்பட்ட கிண்ணங்கள், சணல் பைகள், துணிப்பைகள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பதாகைகள் ஏந்திய மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு பேரணி பேருந்துநிலையம், தேரடி, சத்திரம் வழியாக சென்று நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் சேரலாதன், நகராட்சி ஆணையர் திருநாவுகரசு, உதவிப் பொறியாளர்கள் பிரபாகரன், இளமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.